4th November 1966]

மத்திய சர்க்காருடைய எண்ணத்தைத் தெரிந்து கொள்ளாமலேயே இந்த அரசாங்கமே, தாமாகவே, முதியோர் பென்ஷன் கொடுக்கும் திட்டத்தை நிறைவேற்ற முன்வந்தது, நிறைவேற்றி வருகிறது, தொடர்ந்து நிறைவேற்றும்.

திரு. வை. சங்கரன் : இப்பொழுது இருக்கும் திட்டப்படி, விதிப் படி, வயது வந்த பிள்ளைகள் இருந்தால், அவர்களுக்குக் கிடையாது என்றிருக்கிறது. சில சமயங்களில் பிள்ளைகளுக்கு பயித்தியம் பிடித்திருக்கலாம், அல்லது அந்தப் பிள்ளைகளால் 'டெஸர்ட்' செய்யப்பட்டிருக்கலாம், ஓடிப்போயிருக்கலாம். அதுபோன்ற கேசுகளை 'எக்ஸப்ஷனல்' கேசுகளாகப் பாவித்து, விதியைத் தளர்த்தி பரிசீலனை செய்து கொடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது போன்று இருக்கும் கேஸ் களை கனம் அங்கத்தினர் எழுதியனுப்பினால், மேலும் விதியைத் தளர்த்த வேண்டுமா என்பதையெல்லாம் கவனிக்கலாம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, 1965-ம் ஆண்டு ஒரு கோடி என்பது லட்சம் வரை முதியோர் களுக்கு வழங்கப்பட்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தத் தொகை முழுவதும் மாநில சர்க்காரே ஏற்றுக்கொண்டதா அல்லது அதிலே மத்திய சர்க்காருடைய மானியமும் உண்டா என்று அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தத் திட்டம் மாநில அரசாங்கமே நிறைவேற்றிய திட்டம். இது திட்டத்திற்கு— ஐந்தாண்டுத் திட்டம் ப்ளானுக்கு உட்பட்டது. ஆனால், இந்த அரசாங்கமே ஏற்றுக்கொண்டு நிறைவேற்றும் திட்டம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : தற்போதுள்ள வயது வரம்பு 60; அங்கஹீனமானவர்களுக்கு அப்படிப்பட்ட வரம்பில்லாமல், தகுதி யுள்ளவர்களுக்கெல்லாம் கொடுக்க யோசனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றித் தனிக் கேள்வி போடவேண்டும்.

மாவட்ட நீதிபதிகள்

*** 389 கேள்வி—திரு. செ. மாதவன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாவட்ட நீதிபதிகளில் எத்தனை பேர் ஓய்வு பெற்ற பின்பும் 1966-ம் ஆண்டு ஜூலை மாதம் வேலை பார்த்து வருகின்றார்கள்?

(இ) அவர்களது பதவிக்காலம், ஓய்வு பெற்ற தேதியிலிருந்து எத்தனை ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Ten, Sir.

(b) Normally, till they attain the age of 58.

திரு. செ. மாதவன் : சார், ஓய்வுபெற்ற பிறகு வயது வரம்பிற்கு மேலும் ஆண்டுதோறும் எக்ஸ்டென்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. 58 வயது வரை ஆண்டுதோறும் இப்படிக் கொடுத்தால், அதுவும் ஜூடிஷியல் சர்வீசில் உள்ள ஒருவருக்குக் கொடுத்தால், அது நீதியில் குறுக்கிடுவது என்று ஆகாதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதையெல்லாம் ஹைக்கோர்ட்டு சிபாரிசின் பேரில் அரசாங்கம் முடிவு செய்கிறது.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த மாவட்ட நீதிபதிகள் போலவே, துணை நீதிபதிகளுக்கும் வயதை உயர்த்த அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

Allowance to student-trainees

* 390 Q.—SRI C. SRINIVASAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the amount of allowance granted now to the student-trainees in Teachers' Basic Training Institutions; and

(*b*) whether the Government will consider increasing the present allowance to Backward and other community students to Rs. 25 per month?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Rs. 18 per mensem each.

(*b*) No.

விசைத்தறிகள்

*391 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் மத்திய சர்க்காரால் விசைத்தறிகளுக்கு லைசென்ஸ்கள் வழங்கப்பட்டிருக்கின்றனவா ?

(இ) ஆமெனில், எத்தனை விசைத்தறிகளுக்கு லைசென்சுகள் வழங்கப்பட்டிருக்கின்றன ?

(உ) அவைகளில் எத்தனை தறிகளுக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) ஆம்.

(இ) 6,921 விசைத்தறிகள் இம்மாநிலத்தில் அமைப்பதற்கு நூற்பு நெசவு ஆணையாளர் அனுமதிச் சீட்டுக்கள் வழங்கியுள்ளார்.

(உ) தமிழ்நாடு மின்சார போர்டு 5,229 விசைத்தறிகளுக்கு மின்சார இணைப்பு அனுமதித்திருக்கிறது.